ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**விசுவாவசு ஆண்டு புரட்டாசி திங்கள்**
**பௌர்ணமி பூஜைக்கு உண்டான அருளாசி விளக்கம்**

07.10.2025

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
வரமென விசுவாவசு ஆண்டு நங்கை திங்கள்
முழுமதிக்கு உண்டான ஆசி விளக்கமாக

2. ஓங்காரக்குடிலிற்கும் ஓங்காரக்குடிலின் செயல்பாடுகள்
தர்மத்திற்கும் நிர்வாகிகளின் செயல்கட்கும்
தொண்டர் பெருமக்கட்கும் அரங்கன் யான்
மனங்கனிந்து ஆசிதனை அருள்வேன்

3. அப்பனே நங்கை திங்கள் முழுமதி பூஜை
மிகச் சிறப்பாகவே நடந்தேறியது
அரங்கன் என்னோடு ஆறுமுகப்பெருமானும்
அனைத்து மகா ஞானியர் பெருமக்களும்

4. சூட்சுமமாய் வந்து கலந்து
ஓங்காரக்குடிலின் அன்னதானத்திலும்
அன்பர் பெருமக்கட் தொண்டிலும்
யானே கலந்து உயர்வாக

5. இந்த விழா சிறக்க அருள்புரிந்துள்ளேன்
உள்ளபடி ஓங்காரக்குடிலின் விழா
அரங்கன் என் பரிபூரண ஆசியோடு
வருகின்ற காலமும் ஒவ்வொரு முழுமதியும்

6. இது அல்லாமல் தொடருகின்ற
அத்தனை விழாக்களிலும் பரிபூரணமாய்
என் ஆசி நிரம்ப விழா சிறப்பதற்கு
ஆசி உண்டு இனிதே தொண்டர் பெருமக்களின்

7. தொண்டு சிறப்பு ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தை
அரங்கன் யானே நிர்வாகிகளை கொண்டு
இயக்கி வர நிர்வாகத்தின் செயல்பாடு சிறப்பு
தொண்டு வழியான தொண்டர் பெருமக்களின்

8. தொண்டுகளும் சிறப்பு மேலும்
ஓங்காரக்குடிலின் அன்னதானத்துக்கு
உயர்வான பொருளாதார பலமும்
மேலும் வெளி அன்பர்கள் தொடர்பும்

9. கூடுதலான பொருளாதார பலமும் கூட்டி
அரங்கன் யான் காப்பேன்
வகைபட தர்மப்பணிகள் சிறக்கவும்
வல்லமைபட எல்லா கிளைகளுமே

10. தாராள தனபுழக்கம் கண்டு
தொண்டர் பெருமக்கள் பெருக
வெளிபகுதிகளில் வசூல் பணிகளும் சிறக்கவும்
ஓங்காரக்குடிலின் நிர்வாகத்தோடு

11. ஒவ்வொரு கிளைகளும் உயர்வுபட
தொடர்பு கூட்டி உண்மைபட நடக்கவும்
அவர்களெல்லாம் ஓங்காரக்குடிலாம்
தலைமை பீடத்துக்கு விசுவாசம்பட நடக்கவும்

12. அரங்கன் யான் அருள் புரிவேன்
உலகமெல்லாம் என் தொண்டர்
பெருமக்கள் பெருக உலகமெங்கும்
அகத்தியர் சன்மார்க்க சங்கம்

13. உயர்ந்த மார்க்கமாக மக்களிடை
பெருகி இனிதே உலகில்
ஞானிகளுடைய ஆட்சியும் ஞானஆட்சி
காலமுமாக மாற்றம் காணக் கூடும்

14. ஆகவே இதுகாலம் நடந்த பூஜை
அரங்கன் ஆறுமுகன் என்
ஆசிபடவே நடந்துள்ளது
வல்லமைபட பூஜை சிறப்பு

15. வகையான உணவு முறையும்
ஆசி தந்து அருமருந்தாக
அன்பர்கட்கு உருவாக்கியுள்ளேன்
உள்ளபடி அளவிலா வண்ணம் பெருகி வந்த

16. அன்பர் பெருமக்கட்கெல்லாம்
உயர்ஜோதி வழி அரங்கன் யானே
ஆசி தந்துள்ளேன் நிர்வாகிகட்கும்
தொண்டர் பெருமக்கட்கும்

17. அடுக்களை பணிகளில் தொண்டாற்றுகின்ற
தொண்டர்கட்கும் சர்வ பாதுகாப்பு தந்து
அரங்கன் யான் உடன் உள்ளேன்
உள்ளபடி இவர்களெல்லாம்

18. ஓங்காரக்குடில் நோக்கி வந்து
பாதுகாப்பாய் அவரவர் இல்லம்
திரும்பவும் சர்வ பலமாய்
அரங்கன் யான் நிரம்பி

19. அருளாசி தந்து காத்து வருகின்றேன்
அன்னதனால் என் பீடம்
வந்து செல்லும் அன்பர்கட்கு
அவரவர் வேண்டல்கள் வெற்றியாவதோடு

20. இனி பிறவாத பெரும்பேற்றுக்கு
உண்டான மகா மேல்நிலையும்
கண்டு சிறக்க நேரும்
தாராள மனநிலையும் கூடி

21. இனிதே அவர்களெல்லாம்
தர்மத்தில் பெருமளவில் பொருளுதவி செய்து
இந்த அன்னதான சேவை
இன்னும் வெகுவாக சிறக்கவும்

22. உயர்வுபட நடந்தேறவும் அரங்கன் யான்
பரிபூரண ஆசி தந்துள்ளேன்
உள்ளபடி இனிதே வரக்கூடிய
தீபஒளி நன்னாளிலும்

23. வகைபட என் பெருமக்களெல்லாம்
வல்லமைபட மகிழ்வோடும்
நிறைவோடும் நடக்க
இனிதே அரங்கன் யான்

24. நிர்வாகத்தின் வழி அனுகூலமும்
ஆசியும் தந்து அவர்கட்கு
வேண்டுதலான உதவியும்
தாராள சௌகர்யங்களும் ஏற்படும் வண்ணம்

25. அனுகூலம் ஆசி தந்து
காத்தருள் புரிகின்றேன்
என் ஆசிபட நடக்கின்ற
நிர்வாகம் அன்பர்கள் மனம் மகிழ

26. சேவையாற்றி வர அரங்கன்
யானும் மகிழ்ந்து நிர்வாகிகளையும்
நிர்வாகத்தின் திறனையும்
இதனொடு தொண்டர் பெருமக்களோடு

27. கொண்ட தொடர்பையும்
வலுவாக்கி இனிதே
அரங்கன் யான் பாதுகாப்பேன்
என் ஆசி படவே

28. அனைத்து செயல்களும் இயங்கி வர
இனிதே அன்பர்கட்கு பெரும்
பாதுகாப்பு கூட்டி அருள்புரிவேன்
ஓங்காரக்குடில் முழுக்க

29. ஒவ்வொரு கிளைகளின் முழுக்கவும்
அரங்கன் என் பாதுகாப்பு வேலி
இருப்பதாலே மற்ற அன்பர்களோ
எதிர் சக்தி வழியோ

30. எந்த இடரும் குறுக்கீடும்
வாராத வண்ணம் பாதுகாப்பு கூட்டி
காத்தருள் புரிவேன் அன்னதனால்
தொண்டர் பெருமக்கட்கு

31. அணுகுகின்ற சோர்வு சோடை
அத்தனையும் நீக்கி
அரங்கன் யான் காப்பேன்
ஆயுள் காப்போடு அவர்கட்கெல்லாம்

32. திடமுறவும் செயல்களில் வெற்றி பெறவும்
சர்வ சூட்சுமமாய் யானே இருந்து இயங்கி
பேரற்புதம் நிகழ்த்துவேன் அன்னதனால்
அரங்கன் யான் பரிபூரணமாய்

33. ஜோதியாய் அவர்கள் சுவாசமாய்
கலந்து அருள் புரிவதாலே
உண்மை சரணாகதி கொண்ட
அனைவருக்கும் ஓங்காரக்குடில் நோக்கி

34. வருகின்ற யாவர்க்கும் அரங்கன்
என் வழிகாட்டுதலும் எந்தனுடைய
ஆசி அனுகூலமும் பரிபூரணமாய்
உண்டு உண்டு அரங்கன் யான் அருளிய ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி